தமிழ் வாழ்க.

துணர் சக. மலர் கக, கஉ.

தமிழ்ப் பொழில்

விசுவாவசு — மாசி, பங்குனி.

1966

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், பி. ஏ., பி. எல்.,

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௧	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௭ விசுவாவசு, மாசி. 1966—பிப்ரவரி	மலர் ௧௧.

பொழிற்றொண்டர் பேசுகின்றார் !

கலைவளர் கல்விக் கழகம்.

பைந்தமிழ் உயர்ச்சி பெறுதற்காகப் பாண்டி வேந்தர் பண்டு தமிழ்ச் சங்கத்தை மதுரையில் தோற்றுவித்தனர், இத்திங்கள் தமிழகத்தின் மூன்றாவது பல்கலைச் கழகம் மதுரையில் செயற்படத் தொடங்கியுள்ளது. தமிழுக்கும் மதுரைக்கும் தொடர்புண்டு. தண்டமிழ் மதுரையில் அமைக்கப்பெற்ற பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் துணைவேந்தராக அமைக்கப்பெற்றமை மிகவும் போற்றுதற்குரியது. தமிழுக்கு ஆக்கம் தேடும் பல்வேறு துறைகளிலும் சிறந்த ஆய்வினை நிகழ்த்தியும், தமிழுக்குரிய இடத்தைப் பல்கலைக் கழக நடைமுறைகளில் கொடுத்தும், தமிழ்ப் பல்கலைக் கழகமாக மதுரைப் பல்கலைக் கழகம் திகழ வேண்டும் என வேண்டுகின்றோம்.

தமிழ் வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பன்மொழிப் புலவர்,
பேராசிரியர், திருவாளர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி எல்., எம் ஓ. எல்.
அவர்கட்கு

30—1—66ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் கூறும்

பாராட்டியல் வாழ்த்துரை.

1 உலகுடன் உவந்து வாழ்கென்றே உயர்மலை விட்டு
நடையாடி
நலம்பல சேர்க்கும் செய்களிலே நன்றும் விளைவைக்
கண்டமையால்
கலகல வென்றே காற்சிலம்பு கவிதை பாட
வெளிதவழ்ந்தே
அலைகடல் அணையும் பொன்னியவள் அழகு கொழிக்கும்
புனல்நாட்டில்

2 குலையாக் கொள்கை கொள்சோழன் குன்றென வெடுத்த
பெருங்கோயில்
உலையா உணர்வால் உயிர்த்தே ஒட்பம் செய்யும்
இசைகூத்துத்
தலைமைக் கலையின் தாயகமாம் தமிழ்நலம் தழைக்கும்
தஞ்சைதனில்
நிலைபெறும் தமிழ்க்கே தொண்டுசெயும் நீள்புகழ்
கரந்தைத் தமிழ்ச்சங்கம்

3 நிறைவுறு வாழ்வும் பலபேறும் நிலைபெற் றுயரும்
தமிழ்த்தொண்டும்
குறைவறக் கொள்ளும் கொள்கையினால் கொழிதமிழ்
போன்றே வாழிஎன,
பொருவில் புகழ்சேர் தமிழ்மதுரைப் பல்கலைக் கழகத்
துணைவேந்தர்
திருவமை தமிழ்ப்பே ராசிரியர் தெ.பொ. மீ.யைப்
போற்றிடுமால்

4 இயலால் ஓங்குந் தமிழ்மொழியின் ஏற்றம் யாவும்
பிறமொழிவாழ்
அயல்நாட் டறிஞர் வியந்தேற்க அறைந்தீர் அமெரிக்
காசென்றே
செயலால் ஓங்கும் பேராசான் தெ.பொ.மீ. என் றுலகேத்தும்
வியலார் திறல்சேர் மீனாட்சி சுந்தரனார் இசை மிகவாழி!

5 வெல்வழக் குரைஞ ராக வாழ்வினைத் தொடக்கம் செய்தும்
கல்வியில் கருத்துக் கொள்ளும் கலைமகிழ் ஆசா னாகிப்
பல்துறை பயின்ற பாங்கால் பல்கலைச் செல்வ ராகி
வல்லமை பெற்ற செம்மால்! வாழிபல் லூழி வாழி!

6 பைந்தமிழ் போற்றும் நோக்காற் பன்மொழி யாய்ந்த பாங்கும்
நைந்திடா வகை தமிழ்க்கே நலந்தரும் இனிய தொண்டும்
உய்வகை உரைக்குஞ் சொல்லும் ஓங்கிடும் ஆட்சி வீறும்
மெய்வகை மேவும் சீர்த்தி மிகுதமிழ்க் குரிசில் வாழி!

7 பாண்டிய மன்னர் முன்னாள் பழந்தமிழ்ச் சங்கம் தோற்றி
ஆண்டநாள், ஆண்ட அந்தப் பாண்டியன் அவையேற்
றுற்போல்
மாண்புகழ் மதுரை மேவும் பல்கலைக் கழகத் திந்நாள்
ஈண்டிய இசைசி றக்க இயைதுணை வேந்த ரானாய்!

8 பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்த ரப்பேர்
நல்லுளம் கொண்ட அண்ணல்! நந்தமிழ்க் கழகம் சேர்க்கும்
பல்கலைத் துறைகள் யாவும் பைந்தமிழ்ச் சார்பால் ஓங்கி
வெல்திறம் விளங்கத் தொண்டு வீறுடு புரிந்து வாழி!

9 செல்வமும் புகழும் வாழ்வும் திருவருளாலே ஓங்கி
நல்வளம் பொலிய ஊழி நறும்பணி புரிந்து வாழி!
ஒல்வழித் தமிழ்த்தொண் டாற்றும் உயர்தமிழ் அறிஞர் வாழி!
சொல்வளர் சங்கம் வாழி! தொண்டர்கள் வாழி வாழி!

30—1—66
கரந்தை.

இங்ஙனம்,
ச. சுயம்பிரகாசம், பி.ஏ., பி.எல்.,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கரந்தைப் புலவர் கல்லூரி

இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 28-ஆம் ஆண்டு நிறைவு விழா 29—1—66 அன்று பிற்பகல் 5 மணியளவில் தமிழ்ப்பெரு மன்றத்தில் நிகழ்ந்தது. கல்லூரி மாணவியர்கள் இறைவணக்கத் திற்குப் பின், முதல்வர் கு. சிவமணி எம். ஏ., பி. டி. அவர்கள், பொதுவாக இவ்வாண்டில் கல்லூரியில் அமைந்த சிறப்பியல்புகளை யும், குறிப்பாகத் தேசிய மாணவர் படை நிறுவப்பெற்றமையையும் விளக்கி விழாவிற்கு வந்திருந்த பெருமக்கள் அனைவரையும் வரவேற் றார்கள். வாழ்த்துச் செய்திகள் படித்ததற்குப் பின் விழாவிற்குத் தலைமை வகித்த பேராசிரியர் (Major) அ. கிருட்டினமூர்த்தி, எம். ஏ., பி. எல்., பி. ஓ. எல். (ஆனர்சு) அவர்கள் தம்முன்னுரையில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் சிறப்பியல்புகளையும் கல்லூரியின் நடைமுறைகளையும் பாராட்டிப் பேசினார்கள்.

திருச்சென்னம்பூண்டி—தமிழ் ஆராய்ச்சியாளர் வித்துவான் திருவாட்டி சிவ. பார்வதியம்மையார் அவர்கள் சேக்கிழார் என்னும் தலைப்பில் சேக்கிழாரின் நுண்மாண் நுழைபுலத்தைப் பற்றிப் பல மேற்கோள்களுடன் இயைத்துத் தமிழ்நலங்கனிந்த விரிவுரையாற்றினார்கள்.

அடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான், திரு. வி. மு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் சொல் லாராய்ச்சி என்னும் பொருள்பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்கள்; வடமொழி இலக்கியங்களிலே தமிழ்ச் சொற்கள் எவ்வாறு பல்கி யிருக்கின்றன என்பதைச் சான்றுகளுடன் அறிஞர்கள் மனங்கொள் ளுமாறு இனிதே எடுத்துரைத்தார்கள்.

பின்னர் பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் கல்வித்துறைப் போட்டிகளில் பரிசுபெற்றோரின் விவரத்தை அறிவிக்கவும், பரிசுபெற்றோர்க்குப் பரிசுகளை விழாத் தலைவர் கொடுத்தார்கள். சொற்பொழிவாளர்களின் கருத்துக்களைத் தொகுத்தளித்த தலைவர் பின்னுரைக்குப் பின், கழகச் செயலாளர் திரு. து. பார்த்தசாரதி நன்றியுடனும், வாழ்த்துடனும் விழா நிறைவேறிற்று.

வாள் வழங்கிய வாழ்வு.

கு. சிவமணி.

அறிமுகம்.

[ஈத்துவத்தல் இன்பம் என்றூர் வள்ளுவர் பெருமான். வறியார்கு ஒன்று ஈவதே ஈகை என்று அவரே ஈகையைப்பற்றி வரையறுத்துள்ளார் ஈகையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட பாரி போன்ற புரவலர் பண்டைத்தமிழகத்தில் வாழ்ந்தனர். கடைஎழு வள்ளல்கள் எனப்பின் வந்தோர் அவரைத் தொகுத்துரைப்பார் ஆயினர்.

அவருக்குப் பின்னரும் பற்பல புரவலர் தோன்றிப் புலவர்தம் பாடல் கொண்டனர். புரவலர் புலவருக்குப் பொன்னும் பொருளும், மின்னும் மணியும், அசையும் யானையும் அணிதேர்ப்புரவியும், மற்றும் பெறற்கரிய தமது உடைமைகளையும் கொடுத்து உளம் மகிழ்ந்தனர். குமணன் என்பான் அவருள் தலையாயவன்

இளங்குமணன் நாட்டைக் கைப்பற்றிக்கொள்ளவே அவன் தமையன் குமணன் காட்டிலே வாழ்ந்தான். வறுமையுற்ற புலவர் பெருந்தலைச் சாத்தனூர் அவனைத் தேடிவந்தார். புலவரின் வறுமையைப் போக்கத் தனது உயிரைக் கொடுக்கத் துணிந்தான் வள்ளல் கோமான் குமணன். இலக்கியத்தில் அழியா இடம் பெற்ற அவ்வியத்தகு வரலாறே சிறு நாடகமாக உருப்பெற்றுள்ளது.]

காட்சி—1.

இடம்: வீடு.

உறுப்பினர்: பெருந்தலைச் சாத்தனூர், அவர் மனைவி, மகன் நிலாவழகன்.

நிலைமை: பெருந்தலைச்சாத்தனூர் ஓலையில் ஏதோ எழுதிக்கொண்டிருக்கின்றூர். அப்போது ஒரு இசையை வாய்க்குள் முணுமுணுக்கின்றூர். அவர் மனைவி சினத்தோடு உள்ளே நுழைகின்றுள்.

மனைவி: (சினம்மிக) போதும் உங்கள் முணுமுணுப்பு! நான்கு நாட்களாக அடுப்பில் பூனை படுத்துறங்குகின்றது. பாட்டாம் பாட்டு.

புல: அடுப்பில் பூனை குளிர்காயுமளவிற்கு இன்னும் வெப்பம் இருக்கிறதா? மிகவும் நன்று.

மனைவி: கஞ்சிக்கலயமும் காலியாகிவிட்டது. கொஞ்சிவரும் குழந்தையைக் காணும்போது எனது நெஞ்சம் பதைக்கின்றது. (அழுவதுபோல் கண்ணினைத் துடைக்கிருள்.)

புலவன்: அழாதே! அழாதே! எல்லாம் தெரிந்த நீயே இப்படி அழுதால்...

மனைவி: உங்களை மணந்ததற்கு நான் அழாமல் வேறு என்ன செய்ய இயலும்? நானும் இவ்வீட்டிற்கு வந்து பத்தாண்டுகள் ஆகிவிட்டன. நல்ல உடை இல்லை. நாலுபேர் மதிக்க வாழும் வாழ்வில்லை. ஆனால் எப்போதும் தீராத்தொல்லை.

புல: புலமையும் வறுமையும் இரட்டைக் குழந்தைகள்.

மனைவி: இப்படி வீட்டிலேயே இருந்துகொண்டு ஏட்டிலே ஏதாவது கிறுக்கித்தள்ளிக்கொண்டிருந்தால் வயிறு நிறைந்துவிடுமா?

புல: என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?

மனைவி: எங்காவது சென்று யாரிடமாவது பொருள் பெற்று வாருங்கள்.

புல: எனது புலமையை அறிந்து பொருள் தராதவன் வறுமையை உணர்ந்தா தரப்போகின்றான்?

மனைவி: நான்கு பேரிடம் கேட்டால் யாராவது ஒருவராவது பொருள் தருவார்கள்.

புல: பொருள் கொடு என்று பிறரிடம் கேட்பது இழிவாயிற்றே!

மனைவி: இது என்ன பெரிய இழவாகப்போயிற்று?

புல. இப்போது உணர்கிறேன்......

மனைவி: என்ன?

புல: புலவர்களெல்லாம் திருமணம் செய்துகொள்ளக்கூடாது எனச் சட்டமிருந்தால் இப்படித் தொல்லையே இருக்காது. குடும்பம் என்ற அன்புக் கடலில் ஆழ்ந்து நாள்தோறும் செத்துப் பிழைக்க வேண்டியிருக்காது

மனைவி: போதும் உங்கள் பிதற்றல்! உங்களது புலமையை மதித்துப் பொருள்தரும் வள்ளல்கள் இக்காலத்தும் இல்லாமலில்லை. சென்று வாருங்கள்.

(அப்போது குழந்தை நிலாவழகன் வருகின்றான்.)

நிலா: அம்மா! எனக்கு பசிக்கிறதம்மா! உண்பதற்கு ஏதாவது கொடு.

மனைவி: குழந்தை கூறுவதைக் கேட்டீர்களா?

நிலா: அம்மா! நான் கேட்பது உனது காதில் விழவில்லையா உனக்குக்காது ஏன் திடீரென்று செவிடாகிவிட்டது.

(அருகழைத்து வானத்து நிலவைக் காட்டுகிறாள்).

மனைவி: கண்ணே! நிலாவழகா! அதோ வானத்து நிலவைப் பார்த்தாயா? அது உன் முகம்போல அழகாக இருக்கிறது இல்லையா?

நிலா: அது எப்படி வேண்டுமோ இருந்து போகட்டும். நான் கேட்பது எங்கே?

மனைவி: விளையாடுவதற்கு பொம்மை வேண்டுமென்றாயே! அது தானே! எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அப்பா நாளைக்கு வாங்கித்தருவார்கள்

நிலா. அது இல்லையம்மா! எனக்குப் பசிக்கிறது சோறு வேண்டும்.

மனைவி: இந்தத் துன்பத்திற்கு நான் என்ன செய்வேன்?

புல: எங்காவது அக்கம் பக்கத்தாரையாவது கடன் கேட்டு வா! நான் வெளியிற் சென்று பொன் பெற்று வருவேன் (புலவர் நீங்குகிறார்).

நிலா: அம்மா! பசிக்கிறது, ஏதாவது கொடம்மா.

மனைவி: சற்றுப்பொறு! ஏதாவது அடம்பிடித்தால் உனக்கு அடி தான் கொடுப்பேன்.

நிலா: சோறு கேட்டால் கோபிக்கிறாயே! நான் அப்படித்தான் அடம் பிடிப்பேன். (கத்துகிறான்) சோறு! சோறு!! சோறு!!!

மனைவி: ஏய்! நீ கத்தாமல் இருக்கமாட்டாய்?

நிலா: மாட்டேன்.

மனைவி: மாட்டாயா? (அவன் முதுகில் இரண்டு அடி வைக்கிறாள். அவன் அழுகிறான்.)

மனைவி: அழு! நன்றாக அழு! கண்ணீர் வற்றும் வரை அழு! புலவர்க்கு மகனாகப் பிறந்த நீ அழத்தான் வேண்டும் (சிறிது நேரம் கழித்து) கண்ணே! நிலாவழகா! அழாதேடா!

நிலா: (தேம்பிக்கொண்டே) பின் ஏன் என்னை அடித்தாய்?

மனைவி: அம்மா ஏதோ கோபத்தில் அடித்துவிட்டேன். அதற்காக நீ அழலாமா? நீ அழுதால் உன் அம்மா அழுவாள்...பேசாமல் நீ தூங்கு. இன்னும் சிறிது நேரத்தில் நான் உனக்கு சோறுபோடுவேன்.

நிலா: அம்மா எனக்குத் தூக்கம் வரவில்லை.

மனைவி: நீ தூங்கவில்லை என்றால் காட்டிலேயிருந்து பெரிய புலி வரும்.

நிலா: புலி வந்து என்னம்மா செய்யும்?

மனைவி: புலி வந்து நிலாவழகன் என்ன செய்கிறான் என்று கேட்கும்.

நிலா: அது ஏன் அப்படிக் கேட்கும்?

மனைவி: அழுகின்றவரைக் கண்டால் அதற்குப் பிடிக்காது.

நிலா: அம்மா! அப்படி என்றால் நீ எப்போதும் அழுதுகொண்டிருக்கிறாயே! உன்னையும் அதற்குப்பிடிக்காதல்லவா?

மனைவி . பிள்ளைகள் அழுதால்தான் அதற்குப்பிடிக்காது; பெரியார்கள் அழுதால் காரணத்தோடு அழுகின்றார்கள் என்று நினைத்துக்கொள்ளும்.

நிலா : புலிக்குப் பிடிக்காவிட்டால் பிள்ளைகளை அது என்னம்மா செய்யும் ?

மனைவி : அழுகின்ற பிள்ளைகளைக் காட்டிற்குள் தூக்கிக்கொண்டு ஓடிவிடும்.

நிலா . அம்மா எனகசு அச்சமாக இருக்கிறது. நான் அழாமல் தூங்குகிறேன். புலி வந்தால் போகச் சொல்லிவிடு.

மனைவி : அப்படியே அப்பா ! நீ தூங்கு.
(மடியில் போட்டுக்கொண்டு தட்டிக்கொடுக்கிறாள்.)

(காட்சி முடிவு)

காட்சி—2.

இடம் : அரசவை.

உறுப்பினர் : இளங்குமணன், நாகன், அரசவைப் பெருமக்கள்.

நிலைமை : இளங்குமணன் கவலையுடன் அமர்ந்திருக்கின்றான். நாகன் எழுந்து பேசத் தொடங்குகின்றான்.

நாகன் : பெருமக்களே ! அரசர் குமணன் இல்லா இந்நாள் இந்த மலைநாட்டிற்கே ஒரு துயரம் தரும் நாள். துயரக்கடலிலே ஆழ்ந்துவிட்ட இளவரசர் இளங்குமணர் பைத்தியம் பிடித்தவர் போல் காட்சியளிக்கிறார். அவரைக் காணும்போது எனது மனம் நடுங்குகிறது...... நான் எதைச் சொல்வேன் ? நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. அதனால் நம்மிளவரசர், இல்லை, இல்லை. இன்றுமுதல் அரசர் இளங்குமணர்.

ஒருவர் : நிறுத்து நாகா ! அரசர் இளங்குமணர் அரசராவதா ? முடியாது .

கூட்டம் : ஆமாம், ஒருபோதும் முடியாது.

நாக : அமைதியாக இருங்கள். நடந்ததை அறிந்தால் நீங்களே திடுக்கிடுவீர்கள்.

ஒருவர் : என்ன நடந்துவிட்டது ?

நாக : நாங்களெல்லாம் வேட்டைக்குச் சென்றபோது...சென்றபோது...ஐயோ !...அதை எப்படிச் சொல்வேன் ?... நம்மருமை குமண வள்ளல்...

ஒருவர் : வள்ளல் குமணர்...விரைவாகச் சொல்...எங்கே அவர் ?

நாக : எங்கோ மறைந்துவிட்டார். (தொடரும்)

குணமும் குற்றமும்.

புலவர். கு. கணபதி.

மனம் படைத்தவர் மனிதர்—இன்ப துன்பத்தை எண்ணிப் பார்ப்பவர் மனிதர்—பிறர் துன்பங் கண்டால் துன்புறுதலும், இன்பங்காணின் இன்புறுதலும் மனித இனத்திற்கே அமைந்தவை. மனிதரல்லா மற்றைய உயிர்கள் பிறவற்றின் துன்பங்கண்டு துன்புறுதலோ இன்புறுதலோ இல்லை. ஏனெனின் அவற்றிற்கு உள்ளம் இல்லை. உள்ளம் என்ருல் உள்ளுவது. மனம் பெற்றதால் தான் மனிதனெனப் பெயர்பெற்ருன் என்பர்.

மனம் பெற்ற மனிதர் மனத்தை மாற்றவும் செய்வர். மனத்தை மாற்றுவதால் நன்மையும் விளையும். தீமையும் விளையும். தனக்கு மட்டும நன்மை வேண்டுமென்று எண்ணுவது குறுகிய மனம். பிறர்க்கும் நன்மை விளைய எண்ணுவது பரந்த மனம். பிறர்க்குத் தீங்கு ஏற்பட்டதைக்கண்டு மகிழ்வது தீயமனம். மனத்தை நல்ல தன்கண் செலுத்துவோரை குணமுடையோரென்றும், தீயவற்றில் செலுத்துவோரைக் குற்றமுடையோரென்றும் கூறுகிருேம். அஃதாவது மனம் செயல்படும்போது குணமும், குற்றமும் வெளிப்படும்.

குணநலமே சிறந்த நலம்:—

மிகுந்த செல்வ வளம் உடையராயினும், கண்ணைக் கவரும் அழகு நலம் உடையராயினும், யார்க்கும் அஞ்சா உடல் வலிமை கொண்டவராயினும், குண நலம் இல்லாதவராயின் அவையெல்லாம் பெற்றும் பெற்றிலராவர். குண நலமில்லா பிறநலம் நலமாகா. வள்ளுவர்,

> குணநலஞ் சான்ருேர் நலனே பிறநலம்
> எந்நலத் துள்ளதூஉ மன்று. —என்ற குறளால்

மேற்கூறிய கருத்தினை விளககுகிருர்.

குணமுடையார்க்கு முதலில் வேண்டுவது அன்பு. அன்பு தன் மனைவி, மக்கள், சுற்றத்தொடு அமையாது பரந்துபட்டுச் செல்லவேண்டும். எல்லோராலும் அளிக்க இயல்வது அன்பு ஒன்றே. எல்லாவற்றினும் சிறந்ததும் அன்பே. எல்லாவற்றிலும் சிறந்ததும், எல்லோராலும் அளிக்கமுடிவதுமான அன்பை எல்லோரிடத்திலும் செலுத்துதல் வேண்டாவோ ?

தாம் இன்பம் பெறவேண்டுமென்று பிறர்க்குப் பழி செய்கின்றவர் உளர். பிறர் கண்ணீரால் தம் வாழ்வை வளம்படுத்துவர். பிறர் கலங்குவதைக் கண்டு சிறிதும் வருந்தார். பிறருக்குப் பழி செய்ய அஞ்சுகின்ற மனம் வேண்டும். பழி செய்ய அஞ்சுதலும் உயர்ந்த குணமாகும்.

ஒவ்வொருவரும் பிறருக்காகத் தம்மாலான உதவிபுரிதலைக் கடமையாகக் கொள்ளவேண்டும். தமக்கும் பிறருக்கும் பயனுடையவராக இருத்தல்வேண்டும். செய்கின்ற உதவி கைம்மாறு கருதாத உதவியாக இருக்கவேண்டும். உதவிபெற்றவர் தம் நெஞ்சாலே வாழ்த்துகின்ற பேற்றைவிட பெருமையானது யாது ?

உள்ளத்தால் அன்புகொள்வதும், பிறருக்குத் தன்ஞலான உதவிபுரிதலும் போலவே பிறரிடத்து இரக்கங்காட்டுதலும் இனிய குணமாகும். இரக்கம் காட்டுதலைக் கண்ணேட்டம் என்பர். கண்

ணின்மூலம் அன்பினை வெளிப்படுத்தல் கண்ணோட்டமாகும். பார்வையில் அன்பையும் காட்டலாம். வெறுப்பையும் காட்டலாம். புறுஉறுப்புக்களுள் கண்ணே சிறந்தது. பொருள்களைக் காணவும் வல்லது. எண்ணியதைக் காட்டவும் வல்லது. தம்மோடு பயின்றார் மாட்டும், தம்மைவிட மெலிந்தார் மாட்டும் கண்ணோட்டம் வேண்டும். குற்றம் புரிந்தார் மாட்டும் கண்ணோட்டங்கொண்டு குற்றத்தை உணருமாறு செய்தல்வேண்டும். கண்ணோட்டத்தால் தீயவரையும் திருத்தலாம். ஆளுமை உடைய யாவர்க்கும் கண்ணோட்டம் வேண்டும்.

இறுதியில் எல்லோர்க்கும் இன்றியமையாதது உண்மை கூறலும், உண்மை வழி நடத்தலுமாகும். உண்மை, மெய்மை, வாய்மை ஆகிய மூன்று சொற்களும் ஒன்றற்கொன்றுத் தொடர்புடைய பொருளை உடையன. உள்ளம் தூய்மையாயிருத்தல் உண்மை. உள்ளந் தூய்மையாயிருப்பின் செயலுந் தூய்மைபெறும். அதுதான் மெய்மை. அதுபோல உள்ளந் தூய்மையாயிருப்பின் வாய்ச்சொற்களும் தூய்மையாகும். அதுதான் வாய்மை. அதனால் தான் இம்மூன்று சொற்களையும் இடத்திற்கேற்றபடி ஒரே பொருளில் வழங்குகின்றனர்.

மேற்கூறிய அன்பு, நாண் (அச்சம்) ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து குணங்களை உடையவரே குணமுடையராவர். அவ்வைந்து குணங்களிலே எல்லா நல்லியல்புகளும் அடங்கும் தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

> அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
> டைந்துசால் பூன்றிய தூண் —என்ற குறளில்

சால்புடைமைக்கு அவ்வைந்து குணங்களும் தூண்கள் என்கிறார்.

குற்றம் :—

மனக்குற்றம் ஏற்படுவதற்கு முதற்காரணம் அழுக்காறு(அழுக்கு +ஆறு=குற்றவழி). பிறர் நன்றாக இருப்பதைக்கண்டு மனம் பொறாமை அழுக்காறாகும். அழுக்காறுடையவர் தாமும் அமைதியாய் இருப்பதில்லை. மற்றவர்கள் அமைதியாயிருப்பதைப் பொறுப்பதுமில்லை நல்ல ஆடை புனைந்து செல்லோரைக் கண்டாலும், செல்வமுடையவரைக் கண்டாலும். கல்வி கற்றவரைக் கண்டாலும் அழுக்காறு கொண்டவர் மனம் எரியும், அழுக்காறு கொண்டவர் சொல்லாலும், செயலாலும் பிறர்க்குக் குற்றமே விளைவிப்பர். இல்லாததையும, பொல்லாததையும் கூறிப் பிறர்மீது பழி சுமத்துவர். குற்றமாகக் கற்பிப்பதில் ஆற்றலுடையவர். முன்னாலே முகமலரப் பேசிப் பின்னாலே பழிகூறித் திரிவர். இப்படிப் புறங்கூறிப் பலருக்குக் கேடு சூழ்வர். நல்ல நட்பினரைப் பிரிப்பர் ; உறவினரிடம் வேறுபாட்டை வளர்ப்பர் ; தந்தை மகனைத் தனியே பிரிப்பர் ; ஏன், கணவன், மனைவியிடம்கூட வெறுப்பை உண்டாக்குவர். பிறர் குற்றம் காண்பார்களே ஒழியந் தம் குற்றத்தை எண்ணிப் பார்க்கமாட்டார்.

அழுக்காறு கொண்டோர் கொலையும் செய்யப் பின்னிடார். பொருள் உடையவரிடம் பொருளைப் பறிப்பர். அவர் மனமும்,

சொல்லும், செயலும் என்றும் குற்றத்தால் பொருந்தியிருக்கும் அழுக்காறு, பேராசை, வெகுளி இன்னுச்சொல் செருக்கு, காமம் முதலிய தீய இயல்புகள் குற்றமுடையோர்க்கு ஊறிப்போனவை.

குணமும் குற்றமும் :—

குணமுடையார் இயல்புகளையும், குற்றமுடையார் இயல்புகளையும் கண்டோம். இருப்பினும் உலகத்தில் சிறிதுகூட குற்றமே இல்லாது குணத்தையே கொண்டவரைக் காண்டல் அரிது. குணமும், குற்றமும் ஒவ்வொருவரிடம் கலந்துதான் இருக்கும். குற்றம் அறியாமையால் நிகழ்வதுமுண்டு. குற்றமென்று அறிந்த பிறகு தாம் குற்றம் செய்ததற்கு வருந்துவோரும், இனி அக்குற்றம் நேராமல் கண்ணும் கருத்துமாக இருப்போரும் உளர். அறியாமையால் நிகழ்கின்ற குற்றம் அவ்வளவு பெரிய குற்றமாக இருக்காது. அதனுல் பிறர் வாழ்வு அழிக்கப்படாது. அறிந்து செய்கின்ற குற்றம் பிறர் வாழ்வை கெடுக்கும். பறிக்கும். அறிந்து குற்றம் செய்பவர், குற்றமே அதிகம் கொண்டவர், அறியாமையால் குற்றம்செய்பவர் குணமே அதிகம் கொண்டவர்.

ஒவ்வொருவருடைய குணத்தையும், குற்றத்தையும் கொண்டு தான் நல்லவர், தீயவரென்று கூறுகிறேம். "காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்" என்பதுபோலக் குற்றமே காண வேண்டுமென்று ஆராயின் குற்றமே தெற்றெனத் தெரியும். குணம் மேகத்தில் மறைந்த மதிபோன்று மறைந்து விளங்கும். முகம் நன்ருக இருக்கலாம். முகத்தைக் காட்டும் கண்ணுடியில் குற்றமிருப்பின் பெரியதாகவும், சிறியதாகவும், அருவருக்கத்தக்கதாகவும் முகம் விளங்கும். ஆகையால் ஆராய்கின்றவர் மிக நல்லவராக இருக்கவேண்டும்.

சிதறிக் கிடக்கின்ற பல பொருள்களில் அழகான பொருள்தான் முதலில் கண்ணைக் கவர்கின்றது. குணம் அழகான பொருள் போன்றது. குற்றம் அழகற்ற பொருள்போன்றது. ஆதலின் முதன் முதலில் ஒருவரிடம் அமைந்துள்ள குணத்தைக் காண வேண்டும். பிறகுதான் குற்றத்தைக் காணவேண்டும். இவ்வாறு இரண்டையும் ஆராய்ந்து குணத்தைவிட குற்றம் அதிகமிருப்பின் குற்றமுடையோரென்றும், குற்றத்தைவிட குணம் அதிகமிருப்பின் குணமுடையோரென்றும் அறிதல்வேண்டும்.

வாழ்வில்கூட இன்பமும், துன்பமும் கலந்துதான் இருக்கும். எது அதிக அளவில் உள்ளதோ அதைக்கொண்டுதான் இன்ப வாழ்வென்றும், துன்ப வாழ்வென்றும் கூறுகிறேம். வாழ்வில் இன்ப துன்பம் எப்படியோ அப்படித்தான் ஒவ்வொருவரிடம் குணமும், குற்றமும் அமைந்திருக்கின்றன. நல்லவர், தீயவர் என அறியும் இவ்வழியை வள்ளுவர்,

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். —என்ற குறளில் கூறியருளினர்

முன்னிலைப் பன்மைப்பெயர்,

பேராசிரியர். திரு. அடிகளாசிரியர்.

-----o-----

தொல்காப்பியர் விரவுப்பெயரை உணர்த்தும்

" இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீஇர் நீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவும் ஆங் (கு)
அன்னவை தோன்றின் அவற்றொடும் கொளலே "
(தொல்—சொல்—174)

என்னும் நூற்பாவுள் ' நீஇர் ' என்னும் பெயரைக் கூறியுள்ளார்! பின்னர், உயர்திணைப் பெயரை உணர்த்தும்

" எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை யடுத்த மகனென் கிளவியும்
அன்ன வியல என்மனார் புலவர் " (தொல்—சொல்—164)

என்னும் நூற்பாவுள் ' எல்லீரும் ' என்னும் பெயரைக்கூறியுள்ளார். இவற்றுள் ' நீஇர் ' என்பது விரவுப்பெயராகும் ; எல்லீரும் ' என்பது உயர்திணைப் பெயர் ஆகும்.

நீஇர்

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தே ' நும் ' என்னும் சொல்லின் திரிபே நீஇர் என்றனர். அத்திரிபினை,

" அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற பெயர்வயின் ஈவர
இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே "
(தொல்-எழுத்து-327)

"நும்என்னும் ஒருபெயர் தன்னை அல்வழியிடத்துச் சொல்லுங்காலை நகரத்து உக்கெட அந்நின்ற மெய்யிடத்து ஈகாரம்வர ஓர் இகரம் இடையிலே நிற்க, மகரம்கெட அவ்விடத்து ஒரு ரகரம் புள்ளியொடு பொருந்தி நிற்றல் வேண்டும் " என்னும் நூற்பாவாலும் உரையாலும் உணர்ந்து கொள்ளலாம். இதனுள் இரண்டு கேடும் மூன்று மிகுதியும் வந்துள்ளன. " அவைதாம் மெய்பிறிதாதல் " (தொல்—எழு—110) என்னும் நூற்பாவுரையுள் இளம்பூரணர் " ' நீஇர் குறியிர் ' என்பது அம்மிகுதி மூன்று வந்தது " என்றனர். என ஆராய்ச்சிக்குக் கிடைத்த சுவடிகளில் ' நீஇர் ' என்றே இப்பெயர் எழுதப்பட்டுள்ளது. அச்சுப் புத்தகங்களில் ' நீயிர் ' என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் பதிப்பித்த தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரைப்பதிப்பில் " எல்லாம் நீர் நீயெனக்கிளந்து " (169) என்ற இடத்தில் ' நீர் ' என்றும் " நீஇர் நீயென வரூஉங் கிளவி " (182) என்ற இடத்தில் ' நீஇர் ' என்றும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

"அல்லதன் மருங்கின்" (தொல்—எழுத்து—327) என்னும் நூற்பாவின்படி விரவுப்பெயராகிய பன்மை முன்னிலைப் பெயர் தொல்காப்பியர் காலத்தில் 'நீஇர்' என்றே எழுதப்பட்டுவந்தது தொல்காப்பியர் காலத்தில் உயிரும் உயிரும் சேர்ந்தொலிக்கும்பொழுது உடம்படுமெய்பெருமலே பலசொற்கள் ஒலித்து வந்தன என்னும் உண்மையைக் கிளி அரிது, மூங்கா இல்லை, கோஒனே, பலாஅஞ் சிலாஅம், உவாஅப்பதினான்கு, பலாஅக்கோடு, அதாஅன்றம்ம, பழூஉப்பல் முதலான சொற்களால் அறிந்து கொள்ளலாம். தொல்காப்பியர் காலத்தில் *'நீர்' என்னும் சொல் தண்ணீர், நீர்மை, பூராடம் முதலான வேறுபொருள்களைக் குறித்தது.

உயிரும் உயிரும் சேரும் பொழுது உடம்படுமெய் கொடுத்தே வழங்கவேண்டும் என்ற கொள்கையை உறுதியாக அறிஞர் பின்பற்றத் தொடங்கிய காலத்தில் 'நீஇர்' என்னும் சொற்கு யகர உடம்படுமெய் கொடுத்து 'நீயிர்' என்றும் சிலர் வகர உடம்படுமெய் கொடுத்து 'நீவிர்' என்றும எழுதினர். உடம்படுமெய் கொடுக்க விரும்பாதவர் இடையில் நின்ற இகரத்தைக் கெடுத்து 'நீர்' என்று வழங்கலாயினர். இவர்தம் வழக்கத்தால் 'நீஇர்' என்பது நீயிர், நீவிர், நீர் என்னும் மூன்று வடிவத்தைப்பெற்றது.

தொல்காப்பியக் கடலில் சொற்றீபச் சுற்றளக்கப் பல்காற் கொண்டோடும் படகு என்று சிறப்பிக்கப் பெற்றுள்ள நேமிநாதம் என்னும இலக்கணநூல் விரவுப்பெயரைக் கூறுமிடத்து

"தந்தைதாய் என்பனவும் சார்ந்த முறைமையால்
வந்த மகன்மகளோ டாங்கவையும்—முந்திய
தாம்தானும் நீ நீயிர் என்பனவும் தாழ்குழலாய்!
ஆய்ந்த விரவுப்பே ராம்" (34) என்ற வெண்பாவில்

முன்னிலைப் பன்மைப்பெயராக 'நீயிர்' என்னும் சொல்லை மட்டும் குறித்து.

"பேராம் பெயர், பெயர்த்துப் பேர்த்தாம், ஒடு ஓடாம்
நீராகும் நீயிர்" (35)

என்னும் வெண்பாவில் 'நீயிர்' என்னும் சொல் 'நீர்' என்று திரியும் என்று கூறியுள்ளது. இங்கே 'நீயிர்' என்றது 'நீஇர்' என்னும் சொல்லாயிருக்கலாம். இவர் 'எல்லீர்' என்னும் பெயரைப்பற்றி யாதுங் கூறவில்லை.

பவணந்தியார் தாம் இயற்றிய நன்னூலுள் விரவுப்பெயராகிய பொதுப்பெயரைக் கூறும்

"முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயரொரு நான்கும் முறையிரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்
எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர் (நன்னூல்—281)

என்னும் நூற்பாவுள் 'முன்னிலை ஐந்து' என்று கூறி, அவ்வைந்தை 'முன்னிலை எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ (நன்னூல்—284) என்று

* "புனலும் குளமும் பூராடமும் நீரே" (பிங்)

விளக்கினர். இவ்வைந்துள் 'நீ' என்னும் பெயரொழிய மற்றைய நான்கும் முன்னிலைப்பன்மைப் பெயராகும். தொல்காப்பியர்க்கும் நேமிநாதர்க்கும் ஒன்ருயிருந்த முன்னிலைப்பன்மை விரவுப்பெயர் நன்னூலார்க்கு நான்காயிற்று.

தொல்காப்பியர் உயர்திணைப் பெயரென்று ஓதிய 'எல்லீரும்' என்னும பெயரை உம்மை நீககி 'எல்லீர்' எனறு வைத்து, அதனுடன் நீயிர், நீவிர், நீர் என்பனவற்றைச் சேர்த்து முன்னிலைப் பன்மை விரவுப்பெயரை நான்கென்று கொண்டார் நன்னூலார். இந்நான்குள் 'எல்லீர்' என்னும் பெயரை நீக்கி நீயிர, நீவிர், நீர் என்னும் மூன்றுள் எதனை நன்னூலார் மூலப் பெயராகக் கொண்டார் என்று ஆராய்வோம். அவர் உருபியலுள்

"தான்தாம் நாம்முதல் குறுகும்; யான் யாம்
நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற" (நன்—246) என்னும்

நூற்பாவுள் 'நீர்' என்னும் சொல்லை நும் என்று திரித்துக் கொள்வதாலும், பெயரியலுள்,

"நீயிர் நீவிர் நான் எழுவா யலபெறு" (நன்—293)

என்னும் நூற்பாவுள் முன்னிலைப்பன்மைப் பெயராகிய நீயிர், நீவிர் என்னும் இரண்டும் திரிந்து வேறறுமை உருபை ஏலாமல் நின்றபடி எழுவாய்க்கேவரும் என்று ஓதுதலானும், அவர் முன்னிலைப் பன்மைப் பெயர் மூன்றில் 'நீர்' என்னும் பெயரையே மூலப்பெயராகக் கொண்டார் என்று அறிந்து கொள்ளுகின்ருேம்.

எனவே, முன்னிலைப்பன்மை விரவுப்பெயராகத் தொல்காப்பியர் கருதியது நீஇர்; நேமிநாதர் கருதியது நீயிர்; பவணந்தியார் கருதியன எலலீர், நீர் என்பனவாகும்.

தொல்காப்பியர் காலத்தில் 'எல்லீரும்' என்னும் பெயர் முன்னிலையாயிருந்தும அஃறிணைக்கு வழங்காமல் உயர்திணைக்கே வழங்கியபடியால் அவர் அதனை உயர்திணைக்குரியதாகவே கருதினர் போலும். நன்னூலார் 'எல்லீர்' என்பதனை விரவுப் பெயராக ஓதுதலின் அப்பெயர் உயர்திணைககே யன்றி அஃறிணைக்கும் வந்திருக்க வேண்டும். இதற்கு இலககியம் உண்டா என்பதை ஆராய்ந்துதான் துணிய வேண்டும.

இலக்கியங்களில்

ஏட்டில் இளம்பூரணர் உரையில் 'நீஇர்' என்றே எழுதப்பட்டுள்ளது என்பதனை முன்னரே கூறினேன். "யாம் அவணின்றும் வருதும் நீயிரும்" என்னும் அடி சிறுபாணுற்றுப் படையுள் 143-ஆம் அடியாகவும், பெரும்பாணுற்றுப் படையுள் 28-ஆம் அடியாகவும், மலைபடுகடாத்துள் 53-ஆம் அடியாகவும வந்துள்ளது. இதனுள்ளும; 'பழுதில் காட்சியீர் நீயிருந் தொழுமென' (10—70) என்ற மணிமேகலை யடியிலும்; "நீயிர் போய் நுமககறிந்தவாறு புக்கு" என்ற இறையனர் களவியலுரையுள்ளும நீயிர் வந்துள்ளது. "குன்றும உண்டு நீர் பாடினிர செலினே" (புற—110) என்ற அடியிலும், "பாடுவல் விறலியோர் வண்ணம் நீரும்" (புற—152) என்ற அடியிலும், "அங்கு நீர் போமென்றருந்தெய்வ

கம்பன் காட்டும் பெண்மை

வித்துவான், மு, பவானி
(தமிழ்ப் பேராசிரியர். அரசர்கல்லூரி, திருவையாறு)

'பெண்மை 'என்பதற்குக் கட்புலனாயதோர் அமைதித் தன்மை என்று பொருள் உரைப்பர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர். 'பெள்' என்ற அச்சொல்லின் வேர் விரும்புதல் என்ற பொருள் தந்து நிற்றல் அறிந்ததொன்று. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனார். அந்த அமைதித் தன்மையும், விரும்பப்படும் இயல்பும் கொண்ட பெண்மைக்கு வேண்டுவன இக்குணங்கள் என வரையறுக்கின்றான்.

"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்தல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான"

மேற்குறிப்பிட்ட அச்சம, நாணம், மடம், செறிவு, நிறைவு, செம்மை, செப்பு, அறிவு. அருமை என்ற ஒன்பான் குணங்களையும் கம்பன் தன் காவியத் தலைவியிடம் அமையக் காட்டுதன் மூலம் பெண்மைக்கே ஒரு வடிவம் அத்தலைவி என்பதனைத் தெற்றென விளக்கிவிடுகின்றனன். ஆனால் 'உய்த்துணர வைப்பு' என்னும உத்திக் கேற்பத் தன்னூலின்கண் அதனைப் பயில்வோர் தாமே உணர்ந்து இன்புறும் படி வைத்தனனே யன்றித் தானே விளக்கினானில்லை.

அச்சம் என்பது பெண்மையின் தான் காணப்படாததோர் பொருள் கண்ட விடத்து அஞ்சுதல் என்பர் களவியல் உரைகாரர். இராமனைச் சீதை, பொன் மானுடன் அனுப்பிவிட்டு இளையோனுடன் குடிலில் காத்திருக்கும் நேரம், 'குற்றம் வீந்த குணத்தின் எங்கோமான் மற்றவ் வாளரக்கன் புரி மாயையால் இற்று வீந்தனன்' என்ன அதனை இராமபிரானது குரலென ஓர்ந்தவள் 'என்னையல் நின்றியோ ? இளையோய்' என இலக்குமணனை வெகுண்டுரைக்கின்றனள். அவ்வெகுட்சிக்குக் காரணமாய் அமைந்தது உள்ளத்து அவள் கொண்ட அச்சமே என்பது உணரப்படும்.

நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதாம் தன்மை. அந்நாணமிலாப் பெண்டிரைத் தலைமக்கள் அவமதிப்பாராகலானும், வேட்கை உரையா நாட்டம் உலகத்து இன்மையின் தலைவன் ஏமுறற் பொருட்டு அஃது உளவாயிற்றாகலானும் இப்பண்பு இன்றியமையாததாயிற்று. மடத்திற்கும் இஃதொக்கும். அரசவைக்குத் தவமுனியுடன் வருகின்ற இராமனை சீதை நேர்முகமாகக் காண விழையாமல்,

அய்யனை அகத்து வடிவேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கண்ணனின் நோக்கினாள். இங்ஙனம்

(504 ம்பக்கம் தொடர்ச்சி)
முரைப்ப" (6—2) என்ற மணிமேகலையடியிலும் 'நீர்' என்ற சொல் வந்துள்ளது. 'நீவிர்' என்ற சொல் பழைய இலக்கியங்களில் வந்துள்ளதாக எனக்குத் தெரியவில்லை ஆராயும் அவாவுடையார்க்கு நினைவூட்டுவதற்காகவே இக்கட்டுரையை எழுதினேன். அறிஞர் ஆராய்ந்து உண்மை உணர்த்த வேண்டுகின்றேன்.

உளம் விழையினும் குறிக்கொண்டு நோக்காது கடைக் கணித்து நிற்கும் நிலைமை அவ்வணங்கின் நாணமிகுதியை நன்கு புலப்படுத்துகின்றது.

மடம் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாம், இராமனுக்கேற்ற மனைவியான சீதை மடம் எனும் குணம் கொண்டு தோன்றுங்காலை, பச்சிளம் குழந்தை ஒன்றுக்கு ஒப்பாகத் தோன்றுகிறாள். வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திரா இயல்புடைய அப்பேதை இராமன் உள்ள இடமே அயோத்தி என்று அவனுடன் தேரில் காடு நோக்கிச் சென்றகாலை, 'ஆண்ட நகர் ஆரையாடு வாயில் அகலாமுன், யாண்டையது கான்' என்கின்றாள். உடன் வந்த அமைச்சன் சுமந்திரனுக்குச் செய்தி கூறிவிடுகின்ற சீதை தன்னுடைய தங்கையரைத் தன்னுடைக் கிளிகளைத் தான் வரும்வரைப் பாதுகாக்குமாறு கூறியதாக உரைக்க வேண்டுகின்றாள். பதினான்கு ஆண்டுகள் அக்கிளிகள் உயிர்வாழுமோ என்ற எண்ணமே அவளுக்கு இல்லைபோலும். இவ்விரு நிகழ்ச்சிகளும அவளது மடமைக் குணத்திற்கு நல்ல சான்றுகளாக அமையும்.

செறிவாவது அடக்கம். இருபாலாருக்கும் அடக்கம் பொதுவில் வேண்டப்படினும் பெண்பாலருக்கே பெரிதும் வேண்டப்பட்டது. அரசவைக்கு வந்த சீதை, 'மாதவரை முற்கொள வணங்கி பாதமலர் பணிந்து கண்பனி சோரும் தாதை அருகிட்ட தவிசில் தனியிருந்த காலத்து அடக்கம் என்பதற்கு ஒரு பொருளாய் உருவாய் விளங்குகின்றனள். நிறை, மறைபிறர் அறியாமை நெஞ்சினை நிறுத்தல் அமைதி எனப்பொருள் கொளும். அரசவைக்கு வருமுன்னரே அவளும் நோக்கினாள். அண்ணலும் அவளை நோக்கினான். நோக்க அப்பார்வை தன் உளமெலாம் நிறைந்தவனை எண்ணுகின்றாள்'

''வரை செய்தான் வில்லிறுத்தவன் அம்மாமுனியொடும்
விரவினான் விடுவல் யான் உயிர்''

தன் அகத்துள் எழும் இவ்வெண்ணத்தைப் புறத்துத் தோழியரிடமும் கூறாது தோற்றும் அந்நிலையில் சீதையிடம் நாம் நிறைவை நிறைவாகக் காண்கின்றோம்.

செம்மை, மனங்கோடாமை, கற்பு என்பன ஒரு பொருளன. அனுமனைத் தீச் சுடாவாறு தீக் கடவுளை ஏவல்கொண்ட காலை வெளிப்படும் அவள் கற்புடைமை, அங்கியான்

'என்னை இவ்வன்னை கற்பெனும்
பொங்கு வெந் தீச்சுடப் பொறுக்கலாமையால் இங்கணைந்தேன்'

என்று சாற்றுங்காலை வலியுடைத்தாதல் காண்க.

செப்பு என்பது நாவன்மை. பெண்டிர்க்கு அடக்கம் வேண்டுமெனப் பொதுப்படக் கூறவே நாவடக்கமும் பெறப்பட்டது எனினும் ஏன்றகாலை நாவன்மையும் அவர்க்கே வேண்டப்பட்டது. சிலம்பின்கண் கண்ணகியின் நாவன்மையை வழக்குரைத்த காதையில் கண்டவர், சீதையின் நாவன்மையை அனுமன் சீதையைத் தன் தோள் மேல் ஏறிக்கொண்டு இராமனிடம் வருமாறு வேண்டும்போது

'அரியதன்று நின் ஆற்றலுக் கேற்றதே' என்று தொடங்கி உரைக்கும் மறுமொழிகளான் நன்கு உணரலாம். 'நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின் நின்ற வஞ்சனை நீயும் உரைத் தியோ ?' 'ஏறு சேவகன் மேனி யல்லாவிடை ஆறு மைம்பொறி நின்னையும் ஆணெனக் கூறும் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ' எனும் இவ் விடங்கள் சிறப்பாக வியந்து பாராட்டற் குரியன.

அறிவு, தன் தகுதியைத் தானே அறிதலும் நன்மை பயப்பனவும், தீமை பயப்பனவும் அறிதலும் ஆம். சீதை கற்புடை மங்கையாகலின் அவ்வலிகொண்டு தான் உய்ந்திருக்கலாம் இராவணனிடமிருந்து. ஆனால் செய்யவில்லை. ஏன் ? தன் தகுதியை அறியவில்லையா ? அன்று. அன்று. அறிவாள். ஆனால் அது மட்டும் அறிவாகாது. அதனுடன் நன்மை, தீமை பகுத்தறியும் அறிவுக் கூறும் அவள்பால் அமைந்தமையின் அதனைச் செய்யாளாயினுள். அவள் கூற்ருய் வெளிப்படும்

'அல்லல் மாக்கன் இலங்கையதாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லினுல் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்' என்ற

பாடல் இதனை நன்கு விளக்குதல் காண்க.

அருமை, உள்ளக் கருத்து அறிதல் அருமை. ஆழ்கடலின் ஆழத்தைக் காண்டல் அணங்கார் உள்ளாழம் காண்டலின் எளிதே என்பர் உலகோர். சீதையின் உள்ளத்தே இராமனும் அறியவொண்ணுத ஒரு சில உணர்ச்சிகள் குடிகொண்டிருந்தன. இராமனுெடு பழகியவளாகலின் பொதுப்படையாகச் 'சிறக்கும் மாமியர் மூவரும்' என்று பேசினுலும் உள்ளத்தில் கைகேயிடமும் கூனியிடமும் தனிப்பட்ட வெறுப்பு சீதைக்கு உண்டு. பிரமாத்திரம் விடப்பட்டபின் போர்க்களத்தில் மயங்கிக் கிடந்த இலக்குவனேடு கூடிய இராமனை இறந்தானுகக் கருதிய சீதை.

'உய்யலுயர் கோசலை தன்னுயி ரோடு
ஐயா இளையோர் உயிர் வாழ்கி லரால்
மெய்யே வினை மேவி விடுத்த கொடும்
கைகேயி கருத்து இதுவோ களிறே' என வருந்து

மிடத்து 'கொடும் கைகேயி' என்ற சொற்களான் கைகேயிபாற் கொண்ட வெறுப்புப் புலனுதல் காண்க. அரக்கியரைக் கொன்று தின்ன விரும்பிய அனுமனிடம், 'கூனியின் கொடியார் இவரே !' என வினவாக எழுப்பிக் கூனியினும் கொடியாரன்று இவர் என்று கூறும்பொழுது அவள் அருமையாக மறைப்பினும் கூனிபால் அவள் உற்ற வெறுப்பு வெளிப்பட்டுவிடுகிறது.

இன்னணம் கம்பன் தான் தோற்றிய காப்பியத் தலைவியினிடத்துப் பெண்மைக்குரிய தலையாய ஒன்பான் குணங்களையும் ஏனையவற்றையும் பெய்து வைத்து அவளை முழுமையுற்ற பெண்வடிவாக ஆக்கித் தந்தமை உய்த்துணர்ந்து இன்புறற்குரியதாம்.

இலக்கியத்தில் அறங்கள் *

மு. மணிமேகலை (நிறைவு நிலை க, கரந்தைப் புலவர் கல்லூரி)

"அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என்பது தெய்வப் புலவர் பெருமான் திருவள்ளுவரின் அமுத வாக்கு மேலும் அறம் என்ருல் மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும விலககியன ஒழித்தலுமே யாகும் என்று பரிமேலழகர் கூறுகின்ருர் நம ஔவை மூதாட்டியும் "அறம் செய விரும்பு" எனக்கூறியுள்ளார். எனவே அறத்தைப் பற்றிப்பேசாத இலக்கியங்களே இல்லை எனலாம். எனவே ஈண்டு நாம் கண்ணெனப் போற்றும் இலக்கியமாகிய திருக்குறளில் அறத்தைப்பற்றிப் பேசப்படுவதை ஒரு சிறிது காண்பதோடு மற்ற இலக்கியத்தில் அறங்கள் செய்கின்ற வகைகளையும் நோக்குவோம்.

அறம் செய்வதில் பல வகைகள் உண்டு:—1. தான் இன்ன அறத்தைச்செய்தால் இன்ன பயன் கிடைக்கும் எனக் கைம்மாறு கருதிச் செய்வது ஒன்று.

1. எதையும் எதிர்நோக்காமல் மழையைப்போல் கைம்மாறு கருதாமல் செய்யும் அறம் ஒன்று இம்மை மறுமை, வீடு ஆகிய இம்மூன்றிலும் நல்வாழ்வு பயப்பதே அறத்தின் பயன்.

திருக்குறளில் அறம் :—

திருக்குறளில் முதலில் பாயிரமாகக் கூறப்படும் நான்கு அதிகாரத்தினுள் நான்காவதாகவும் நீத்தார் பெருமையின் பின்னும் வைககப்பட்டது அறம். அதை வலியுறுத்திச் செல்லுகின்ருர்: அறத்தின் இலக்கணம்; அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் இவை நான்கு இல்லாமல் இருத்தல். அழுக்காறு—பிறரை வஞ்சித்து வாழ விரும்புதல்.

அவா—பிறர் பொருள்மேல் பற்றுவைத்தல்; அதன் காரணமாய குற்றம்.

வெகுளி—கோபம், கடுஞ்சினம்

இன்னுச்சொல்—இனிய உளவாக என்றபடி கனிபோன்ற சொற்கள் இருக்கும் பொழுது காய் (காஞ்சிரங்காய்) போன்ற சொற்களைக் கூறல;

நான்கு குற்றங்களும் இல்லாதிருத்தல் தான் அறன் எனப்படும். மேலும அவ்வறம் இல்வாழ்வானுக்கே உரியது.

---

* கல்லூரிக் கட்டுரைப்போட்டியில் பரிசுபெற்றது.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என வலியுறுத்திச் செல்லுகின்றார் திருவள்ளுவர் துறவறத்தாருக்கும் அறம் உண்டு ஆனால் அது பிறரால் பழிக்கப்படாமல் இருத்தல்வேண்டும் என்று பலபடியாகத் திருவள்ளுவர் கூறிச் செல்கின்றார்.

அடுத்துக் கண்போல் விளங்கும் சிலப்பதிகாரத்தில் அறத்தைப் பற்றிப் பேசும் இடங்கள் பல உள்ளன அதில் திருவள்ளுவர் கூறியபடி அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதற்குத்தான் சான்றாக இல்லையே என்று கண்ணகி வருந்துகின்றாள்; அவள் வாயிலாக நமக்கு அறத்தின் இன்றியமையாமையையும் அதன் பயனையும் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

'அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்குஎதிர்தலும் தொல்லோர் சிறப்பின்'
விருந்தெதிர் கோடலும்

என்ற அடிகளாலாலும் அறவோர் என்பார் தமக்கு விதிக்கப் பட்ட ஆச்சாரத்தில் வழுவாது இருப்பார் என்பதினாலும்; அந்தண ரின் இலக்கணம் தானம் வாங்குதலும் அதனைக் கொடுப்பதும் தென் புலத்தார் போன்ற ஐவரையும் ஓம்புதல் இலவாழ்வானின் கடன் என்பதையும் அறத்தின இன்றியமையாமையையும் விளக்கிச் செல்லு கின்றா அடிகள். மேலும் மாடல மறையோனின் வாயிலாக அடைக்கலக்காதையில் பல அறங்களை நமக்கு உணர்த்துகின்றார். அவன் 'இல்லோர் செம்மல்' என்று கூறுகின்றான். இதில் கோவலன் செய்த அறங்களாக மூன்று அறங்கள் சிறப்பாகக் குறிப் பிடப்படுகின்றன.

1. அவன் முதியவனாகிய அந்தணனை யானை (மதம் பிடித்தது) யிடம் இருந்து காப்பாற்றுகின்றான்.

2. கீரியைக் கொன்ற பார்ப்பனத்தியை அவள் கணவனுடன் சேர்ந்து வாழவைக்கின்றான்

3. பொய்ச் சான்று சொன்னவனின் உயிரைக் காப்பாற்ற முயன்று பின் தோல்வியுற்று அவன் குடும்பத்திற்கு அழியாத பெரு நிதியைத் தானமாகத் தருகின்றான் என்று அவன் அறம் செய்த விதங்களை நமககுச் சுட்டிக்காட்டிச் செல்கின்றார்.

சிலப்பதிகாரத்தின் மூன்று உண்மைகளில் தலையானது அல்லவை செய்தவரை அறமே கூற்றமாகி அழிக்கும் என்பது ஒன்று எனவே அறத்தை (நேர்மையை) நீதியைக் கண்ணகி எடுத் துச் சொன்னவுடன் இடியோசை கேட்ட நாகம்போல் நடுங்கி வெய்துயிர்ப்பு உற்று வீழ்ந்து அறத்திற்காகத் தன் உயிரைக் கொடுத்து வளைந்த செங்கோலை நிமிர்த்துகின்றான் பாண்டியன்.

இவ்வாறு அரசர்களாக எடுத்துக்கொண்டு பண்டை நாளில் அறங்கள் எவ்வாறு இருந்தன என்று பார்த்தால் சுடச்சுட

ஒளிரும் பொன்னைப்போலத்தான் புடம்போட்டது போல்தான் அமையும் வைரம் பட்டை தீட்டத் திட்டத்தான் ஒளிவிடும். எனவே அதுபோல் அவர் கருத்திற்கு ஏற்றபடி அறங்கள் நடந்துவந்தன.

முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியும்
மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகனும்
புருவிற்காகத் தன் உயிர்கொடுத்த சிபியும்
தன் நீதியை நிலைநாட்டத் தன் கை இழந்த
பொற்கைப் பாண்டியனும்
பசுவிற்காகத் தன் மகனைத்தேர்காலில் இட்ட மனுவும்

என்றபடி பல அரசர்கள் நம்முன்னே தோன்றித் தோன்றி மறைகின்றனர். அவர்களின் அறங்கள் தலைசிறந்த அறங்கள் ஆகும். அன்றைய வழக்கின்படி அவை அறமாக விளங்கி வந்தன. இன்றைய அறமாகிய மக்களின் படிப்பு; கல்விச்சாலை நிறுவுதல் உணவு தானம் இடுதல் வரை எல்லாம் அறத்தின்பாற்பட்டவையே ஆகும்.

'மனத்துக்கண் மாசு இலன்ஆதல் அனைத்தறன்
ஆகுலநீர பிற.' என்றார் வள்ளுவர்.

கைம்மாறு கருதிச் செய்த அறம் சிலவற்றைக் காண்போம் இலக்கியத்தில்.

1. கற்பனைக் கடல் எனப் போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகளின் நூலாகிய பிரபு லிங்கலீலை என்ற நூலில் மமகாரன் என்னும் அரசன் தனக்கு மகப்பேற்றிற்காகத் தவம் இருந்து பிறந்ததினால் பலருக்கும் அவரவர் விரும்பும் பொருளை வெறுக்கும்படி மழைபோல் வாரி வழங்கினான் எனக் கூறிச்செல்கின்றார். மற்றோர் இடமாகிய தகர் வருணனையில் நாட்டு மக்கள் அறம் செய்வதை எவ்வாறு விரும்பிச் செய்தனர் என்பதைக் குறிப்பதற்காக வரும்பொழுது அங்கு அறம் செய்ய விரும்புகின்றவர்களுக்கு மக்கள் அறத்தை ஏற்கக்கூடிய ஏழ்மையில் இல்லை எனக் கூறுகின்றார்.

2. பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனாரின் புராணத்தில் கண்ணப்பரின் தந்தையாகிய நாகன் என்பான் தனக்கு மகன் பிறந்ததால் எல்லோருக்கும் முத்தும் பவளமும் மற்றைய அணிகலன்களும வாரி வாரி வழங்கினான் எனக் கூறுகின்றார் சேக்கிழார் அடிகள். இவ்வாறு பலபடியாக அவரும் அறன் செய்வது கடவுள் தொண்டினைப்போல் எண்ணிப் பலவாறாக கூறிச் செல்லுகின்றார்.

இராமாயணத்தில் இராமன் முடிசூடும்பொழுது பலருக்கு தானம் அளித்தான். ஒரு கிழ அந்தணன் தன் கைத்தடியை வீசினால் எந்த தூரத்திற்குச் செல்லுமோ அந்த அளவிற்கு ஆனிரை வேண்டுமெனக் கேட்டானும். இராமன் காட்டிற்குச் செல்லும்

பொழுது; எனவே அத்தகைய சூழ்நிலையிலும் அறம் செய்த நிலையைக் காணுகின்றோம்.

அடுத்து இதிகாசமாகிய பாரதம் இதில் கொடை, செய்வதற்காகவே பிறந்தவன் கர்ணன் என்பவன். எனவே அவனுடைய கொடைகளாகக் கூறப்படுவது பல அதில் அவனுடைய இடது கை கொடுக்கும் வள்ளன்மையை வலதுகை அறியாமல் செய்வானும். அவனுடைய கொடை அறத்தில் சிறப்பாக கூறப்படுவன அவனுடைய கவசமும், கர்ண குண்டலங்களும்தாம்.

அடுத்து கூலவாணிகன்சாத்தனின் மாபெரும் காப்பியமாகிய மணிமேகலையில் அறத்தின் உருவாகவே மணிமேகலையை ஆக்கித் துறவறத்தின் முதற் கடமை பிறருக்குத் தொண்டு செய்து பிறர் துன்பமே தன் துன்பமாக ஏற்றது. எனவே பிறர் துயரைத் துடைப்பதே அறத்தின் பயன் ஆகையால் மணிமேகலையில் அவள் அன்னத்தை மக்களுக்கு வழங்கும் அரிய அறத்தை மேற்கொண்டாள். இதேபோல் பெரிய புராணத்தில் சேக்கிழார் அடிகள் பரஞ்சோதியாரின் அறச்செயலைக் குறிப்பிடுகின்றார். எனவே இவ்வாறு பல்வாறுக நம் முன்னோர்கள் செய்த அறச் செயல்கள் பலவாகும்.

அறத்தினை நாம் கண்ணால் காண்பது அரிது. அதனைச் செய்யும் பொழுது அதனைச் செய்பவரை நாம் அறவோர் என்று கூறுகின்றோம். இக்காலத்தில் நீதிபதி என்று கூறுகின்றோம். எனவே நம் முன்னோர்கள் செய்த அறத்தைக் காப்பது வாழையடி வாழையாக வரும் நம் கடமைகளில் தலையாயது. எனவே அறத்தொடு வாழவேண்டும்.

பின்னர்ச் செய்வோம் என்று வாளாது இருக்காமல் தான் சென்ற இடத்தில் எல்லாம் சிறிதேனும் அறம் செய்தால் அது வற்றாத ஊற்றினைப்போல் இருக்கும். எனவே அறத்தைச் செய்து திறம்பட வாழவேண்டும்.

அறத்தை விரும்பி செய்யும்பொழுது இறைவனைச் சிறிதுநேரம் புறச்சூழலைவிட்டுத் தியானித்தால் அச்சிறு நேரத் தூய்மையாம் அமைதியினைப்போல் அறத்தால் வரும் பயன் நமக்குத் தூய்மையான அமைதியினைத்தரும்.

நம் பண்டை இலக்கியத்தில் கண்ட அறங்களுள் சிலவற்றை இக்கட்டுரையும் கண்டோம்.

(170-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நூற் குறியீட்டு விளக்கம்.

(பேராசிரியர். திரு. ச பாலசுந்தரம்)

சொல்லின்கண் பொருள் :—

அபமரபனே சொற்பொருளே ஆயுங்கால் சொல்லின்கண் பொருளைச் சுட்டும் உறுப்புக்கள் எவை எனக் காணுதல் வேண்டும். "சொல்லென்பது எழுத்தொடு ஒருபுடையான் ஒப்புமை யுடைத்தாய்ப் பொருள்குறித்து வருவது" என்பதனை மேலே கண்டோம். ஒரு சொலலை ஒலியளவாகக் காணுங்கால எழுத்து அல்லது எழுத்தின் கூட்டம் என்றும், பொருளுணர்வோடு நோக்குங்கால் சொல் என்றும் கூறி உணர்கின்றோம். தமிழ்ச் சொற்கள்தாம் ஓரெழுத்தாய்த் தனித்தும் இரண்டு முதலாகப் பல எழுத்துககளாய் இணைந்தும் அமைந்துள்ளன. இதனை

"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"

எனத் தொல்காப்பியமும்,

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் ..."

என நன்னூலும் கூருநிற்கும் இனி தொல்காப்பியர் "நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொரு மொழி" —"குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே" எனக்கூறிச் சுட்டும்வினவும் ஆகிய இடைச் சொற்களை உம்மையால் தழுவிக் கொண்டார் - இவர் கருத்தினை ஓராற்றான் உணர்ந்த பவணந்தியார்

"உயிர்மவி லாறும தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில். நொது வர்ங்குறில் இரண்டோடு
ஓரெழுத் தியல்பதம் ஆறேழ் சிறப்பின"

என வரையறுத்துச். சிறப்பின என்ற அடையால் உயிர்க்குற்றெழுத்துக்களையும் தழுவிக் கொண்டார். உயிரும் மெய்யும ஆகிய 'இரண்டெழுத்தினை ஓரெழுத்தாக நன்னூலார் கொண்டது ஒறறுமை நயத்தான் என்றும, அன்மொழித்தொகை இலக்கணத்தால் என்றும் உரையாசிரியன்மார் அமைதி கூறுப.

இனி இரண்டெழுத்து முதலாகத் தொடர்ந்து வரும் சொற்கள் அளவில - இவற்றை நன்னூலார் பகாப்பதம் பகுபதம் எனப் பிரித்துப்

"பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்தீருகத் தொடரும் என்ப "

என அளவும் கூறியுள்ளார். இவர் கூறிய பகுபத இலக்கணம் தமிழ் இலக்கண நூல்களுட் புதுமையாயினும் தமிழியல் மரபுக்கு முற்றிலும் மாறானதன்று. இது நிற்க. இங்கே நாம் காண வேண்டியது எழுத்துக்கள் பொருளைச்சுட்டிச் சொல்லாகிப் பொருள் தந்து நிற்கும் என்ற அவ்வளவேயாம் இலக்கண நூலார் அவ்வெழுத்துக்களை முதல் என்றும் சார்பென்றும் பிரிப்பர். (தொல்காப்பியர் முதலெழுத்துக்கள் எனக் கூறுவிட்டாலும 'சார்ந்துவரல் மரபின் மூன்று" என்றமையின் ஏனையவற்றை முதல் எனக் கோடற்கிழுக்கில்லை) முதலெழுத்துக்களை உயிர் மெய் எனவும், உயிரைக் குறில் நெடில் எனவும் மெய்யை வலிமெலி இடை முதலாகவும், சார்பினைக் குற்றியலிகரம் —குற்றியலுகரம் ஆய்தமெனவும் தொல்காப்பியர் பிரிப்பார் நன்னூலார் உயிர்மெய் முதலாகப் பத்து வகைச் சார்பெழுத்துக்கள் கொண்டார். அது ஒருபுறமிருக்க. பொருளை உணர்த்துவதில் எவ்வகை எழுத்துககள் ஆற்றல் மிக்குடையன எனக் காண்பது சொற்பொருளாராய்ச்சிக்கு இன்றியமையாததாம். எழுத்துக்களுள் தலைமையும் சிறப்பும் உடையன உயிர்கள் என்பது இலக்கண நூலார் கொள்கை ஆயினும் பொருளுணர்த்துவதில் உயிரும் மெய்யும் ஒரு நிகரனவாகவே காணப்படுகின்றன. வினைச் சொற்களுள் உயிர்களினும் மெய்களே சிறந்து காணப்படுகின்றன. பல சொற்களில் மெய்யெழுத்துக்களே பொருளைச் சுட்டும் ஆற்றலுடையனவாக உள. அவற்றை இயக்கும துணையே உயிரெழுத்துக்கள் உள. உயிரெழுத்துக்கள் மொழி முதற்கண் தனித்து வரும் சிறப்புடையன. அவ்வாறே மெய்யெழுத்துக்கள் மொழியிறுதிக்கண் தனித்து வரும சிறப்புடையவாய்க காணப்படுகின்றன. உயிர்களின்றி மெய் இயங்கா. அவ்வாறே மெய்களின்றி உயிர்கள் பல்வேறு பொருள்களைச்சுட்டி நில்லா (தனி உயிர் பன்னிரண்டும் தரும பொருள் மிகக் குறைவே) எடுத்துக்காட்டாக...

'ஆ' என்னும நெடில் பெயராய் நின்று பெற்றத்தினையும் வினையாய் நின்று ஏவலையும் இடைச் சொல்லாய் நின்று வினா எதிர்மறை முதலியவற்றையும் இன்னோரன்ன பிற பொருளையும சுட்டி நிற்கும். ககரம் முதலாய மெய்யெழுத்துக்களின் மேல் கா, சா, தா, நா, பா, மா, யா, வா, என ஏறிய ஞான்று மெய்யெழுத்துக்களை இயக்குந் துணையாய்த் தன்பொருளைச் சிறிதே காட்டி நிற்கக்காண்கிறோம். இனி 'க்' என்னும மெய்யின் மேல் கா-கீ-கு-கூ-கை-கோ-கௌ என உயிர் ஏறி நிற்குங்கால மெய் எழுத்து உயிரெழுத்துக்களைத் தாங்குந் துணையாய்த் தன்பொருளைச் சிறிதே காட்டிநிற்கக் காண்கின்றோம் ஒற்றுமைநயத்தான் உயிர்மெய்யை ஒரெழுத்தாக இலக்கண நூலார் எண்ணினும சொற்பொருள் ஆய்வினா இரண்டெழுத்தாகவே கொள்வர் ஒலியாலும் பொருள் தரும கூறுப்பாட்டாலும் இரண்டாக நடைபெறுதலான். தொல்காப்பியர் நெட்டெழுத்தேழே ஓரெழுத்தொருமொழி எனத் தேற்றேகாரம் கொடுத்தார். பவணந்தியார் உயிர்மெய்யெழுத்துக்களைச் சார்பெழுத்தாகக் கொண்டமையின் நாற்பத்திரண்டு ஒரெழுத்தொருமொழிகள் கொண்டார்.

மெய்யெழுத்துக்கள் பொருளைச்சுட்டும் சிறப்புடையவாயினும் உயிர்போலத் தனித்தொலிக்கும் ஆற்றலின்றி உயிரோடு கூடி முன்னும் உயிரின் பின்னும் ஒலித்து நிற்கின்றன அவ்வாற்றுள் ஒரு மெய்யும் ஓர் உயிரும கூடி நின்று பொருள் தரும சொற்கள்; கா; கீ. கு, கூ. கை, கோ, கௌ—சா சீ சூ சே சை சோ—தா, தீ. து. தூ. தே, தை—நா, நீ, நூ, நொ, நோ—பா, பீ, பூ, பே. பை, போ—மா, மீ. மூ, மே மை, மோ—யா—வா. வீ, வே, வை, வௌ, என நாற்பந்தைந்து காணப்படுகின்றன. [இவற்றுள், பெயர் வினையேயன்றி இடைச் சொற்களும் உள. இவ்வாறே பின்வரும் சொற்களிலும் உளவெனக் கொள்க] இனி உயிரும் அதன்பின் மெய்யுமாக வரும் ஈரெழுத்துச் சொற்கள் :—

அண், ஆண், உண், ஊண், எண், ஏண், ஒண்—அம், ஆம், உம், எம, ஏம், ஓம்—அய், ஆய், உய். எய், ஏய், ஒய், ஓய்—அர், ஆர், இர், ஈர், ஊர், ஏர், ஓர்—அல், ஆல். இல், எல், ஏல். ஒல், ஓல்—அவ், இவ். உவ், எவ்— ஆழ், ஊழ், ஏழ்,—அள், ஆள், உள், எள், ஒள்—அன், ஆன், இன், ஈன், உன், ஊன், என், ஏன ஒன்-என ஐம்பத்தைந்து சொற்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் இணைந்தும தொடர்ந்து நிற்குமசொற்களுள் ஒவ்வொரெழுத்து மாற்றத்தாற் பொருள் வேறுபடுமாற்றைக் கீழ்வரும் எடுத்துக காட்டுக்களால் உணரலாம்.

1	2	3	4	5	
ஆண்	கால்	காண்	உசா	கசி	
ஆய்	சால்	காய்	உகா	கடி	
ஆர்	தால்	கார்	உடா	கணி	
ஆல்	நால்	கால்	உஞா	கரி	
ஆழ்	பால்	காழ்	உலா	கலி	களி
ஆள்	மால்	காள்	உவா	கவி	கறி
ஆன்	வால்	கான்	உரு	கழி	கனி

இச் சொற்களுள் முறையே;

(1) முதல் எழுத்து ஒன்றேயாகப் பின்நிற்கும் மெய்களால் பொருள் வேறுபடுகின்றன. (2) முதல் நிற்கும் மெய்கள் மேல் ஏறிய உயிரும் பின்னிற்கும் மெய்யும் ஒன்றேயாக முதல் நிற்கும் மெய்யெழுத்துக்களால் பொருள் வேறுபடுகின்றன. (3) முதல் நிற்கும் மெய்யும உயிரும் ஒன்றேயாகப் பின்னிற்கும் மெய்களால் பொருள் வேறுபடுகின்றன. (4) முதல் நிற்கும உயிரும் பின்னிற்கும் உயிரும் ஒன்றேயாக இடைநிற்கும் மெய்களால் பொருள் வேறுபடுகின்றன. (5) முதல் நிற்கும் உயிர்மெய்யும் பின்னிற்கும் உயிரும் ஒன்றேயாக இடைநிற்கும் மெய்களால் பொருள் வேறுபடுகின்றன.

இவ்வாறே மெய்கள் ஒன்றாக முன்னும் பின்னும் இடையும் நிற்கும் உயிர்களால் பொருள் வேறுபடுமாற்றைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுச் சொற்களால் அறியலாம்.

1	2	3	4	5
அண்	பல்	அடா	அடி	கணு
ஆண்	பால்	அடி	ஆடி	கனி
உண்	புல்	அடு	இடி	கனு
ஊண்	பூல்	அடூ	ஏடி	கனை
எண்	பொல்	அடை	ஒடி	
ஏண்	போல்		ஓடி	
ஒண்				

எனவே ஒரு சொல்லின்கண் ஒவ்வோரெழுத்தும் பொருளைச் சுட்டுங்கருத்துடையதாயின் சுட்டும் ஆற்றலுடையது என்பதை அறிகின்றோம்.

அவ்வாற்றான் நோக்குமிடத்து ஒரெழுத்தொருமொழி தவிர ஈரெழுத்து முதலாக வரும் தொடர் மொழிகளை ஏற்றவழி முதல் நிலை, இறுதிநிலை, இடைநிலையாகப் பிரித்தும் அவ்வப்பகுப்பில் நிற்கும் முன்னொட்டும், பின்னொட்டும், அடையும் சார்புமாய் நிற்கும் எழுத்தொலிகளைப் பகுத்தும், நுணுகி நோக்கிப் பொருளுணர்த்தும் கரு அல்லது உருவை ஆய்ந்தெடுத்து அதனை அப்பொருளுக்கு உரிமையாக்கி அதனை உரிச்சொற் பகுதி எனக்கருதிக் கோடல் வேண்டும். கொள்ளுங்கால் அக்கருவாகிய உரிப்பகுதிக்கு முன்னும் பின்னும் வந்தவற்றை அவை மூலப்பொருளுக்கு எவ்வாறு துணையாகி நிற்கின்றன என்பதையும் கண்டு தெளிதல்வேண்டும்.

இனி ஒரு சொல்லுள் பொருளுணர்த்தும் கரு ஒன்றோ இரண்டோ அமைந்திருக்கலாம். சிறுபான்மை மூன்றும் அமையும். மூன்றுக்கும் மேற்படின் அதனை ஒரு சொல்லாகக்கருதலியலாதாம். என்னை? சொற்பிறப்புக்கு மூலம் இசை, குறிப்பு, பண்பு என மூன்றாக வரையறுத்தமையின் என்க. இசையும் பண்பும் குறிப்பினுள் அடங்கும் என மேலே கண்டோமாதலின் ஒரு சொல்லிற்கு ஒன்றே மூலம் எனக் கூறினும் இழுக்காகாதென்க.

(தொடரும்)

கவிதை மலர்கள்.*

(இரே. செயவீர ராமச்சந்திரன், நிறைவுநிலை, உ., கரந்தைப் புலவர் கல்லூரி)

---

(1) தமிழ்த்தாய் வாழ்த்து.

(வெண்பா)

கண்ணளித்துக்; கற்கண்டு தோற்கும் கவினிசைப்
பண்ணளித்துப்; பைந்தமிழ் நாடென்ற—
[மண்ணளித்துப்
பண்பளித்த அன்னை துளியன்(பு) அளித்திடில்
கண்விழித்துக் கொள்வேன் கனிந்து!

(2) சிறப்பு!

கண்ணிற் கிமைசிறப்பு! கூந்தலுக்குப் பூச்சிறப்பு!
பண்ணிற் கிசைசிறப்பு! பாடுகின்ற—வெண்பாவில்
சந்தம் தருஞ்சிறப்பு! சேர்ந்தொழுகும் மாந்தனுக்குச்
சிந்தனை நல்கும் சிறப்பு;

(3) துயர்!

(நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா)

போனவரும் வரவில்லை! பூக்கின்ற கொடிமுல்லை
தேனொழுகச் சூட்டித்தான் தெள்ளமுதே
[விரைந்தும்மே
நானடைவேன் உனை'யென்று நரடித்தான்
[உரைத்தும்மே!
துள்ளிவந்து வெள்ளிநிலா தோகையெனை
[வாட்டுவதை
கிள்ளித்தான் எறிந்திடவே கண்ணாளர் வாராரோ?
பள்ளியறை முன்சொன்ன பழங்கதைகள் நெஞ்சத்தில்
முள்ளாகிக் குத்துவதை மாற்றுதற்கு வாராரோ?
துள்ளிவரும் தென்றலினால் தாளாத மனத்துயரைக்
கொள்ளையிட்டுப் போக்கிடவே கணப்போழ்தில்
வாராரோ?

---

*கல்லூரிக் கவிதைப் போட்டியில் பரிசுபெற்றது.

எனவாங்கு.

தொல்லை படுங்கொடி முல்லை முறுவலாள்
எல்லை யில்லாது இதயம் வாடி
என்று வருவார் என்றே
நின்று கலங்கினுள் நெஞ்சகம் நெடிதே!

(4) மாலைத் திங்கள்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பாடுபட்டும் பலனின்றிப்
பாட்டாளி உகுத்திருத்தல்
கண்ணீர் மாலை!
மாடுமனை தனைமறந்து
மக்களுக்கு உழைத்திட்டால்
புகழின் மாலை!
சூடுமலர் தனையெடுத்துச்
சரஞ்சரமாய் அதைத் தொடுத்தால்
மலரின் மாலை!
பீடுயர்ந்த வானத்தில்
பொன்னொளியால் மதிதோன்றின்
இன்ப மாலை!

புற்றெழுப்பும் சிற்றெறும்பின்
புதுமுயற்சி கண்டாலோ
புத்தெழுச்சி!
நற்றமிழ்தான் உலகரங்கில்
நடைபோடும் நாள்கண்டால்
மறுமலர்ச்சி!
நற்றுணைவன் மாலையிட்ட
நாள்வந்தால் பெண்ணுக்கு
நன்மகிழ்ச்சி!
முற்றாத இளநகையால்
முறுவலிக்கும் மதிகண்டால்
வரும்மலர்ச்சி!

மொழிநூல் முதல்வர்.

புலவர். தி. நா. அறிவுஒளி.

…o○o…

பல்லூழிகளுக்கு முன்னுலகு தோன்றியது; பின் உயிரினம் தோன்றியது; பின் மக்கள் தோன்றினர்; மக்கள் கண்டுபிடித்த அரும்பொருட்களில் உவமையற்ற ஒண் பொருள் மொழியே. மொழியின் தோற்றம், வாழ்வு, வளர்ச்சி, தளர்ச்சி, மாற்றம், வீழ்ச்சி, போராட்டம், கிளர்ச்சி முதலியவை பற்றி ஆய்ந்துரைக்கும் நூல் மொழி நூலே.

ஒவ்வொரு நாட்டுக்கும் சுவையான வரலாறு உள்ளதைப் போல, ஒவ்வொரு மொழிக்கும் சுவை கனிந்த வாழ்க்கை வரலாற்றுளது. மொழிநூலால் பல வியத்தகு உண்மைகளையும் ஒண்மைகளையும் அறிகிறோம்.

† புது ஆங்கிலத்துக்கு முற்றும் மாறுபட்ட நிலையில் பண்டைக் கால ஆங்கிலம் விளங்கியது. அமைப்பு, ஒலிப்பு, மொழித்தோற்றம் ஆகியவற்றால் பழங்கால ஆங்கிலம், தற்சால ஆங்கிலத்தினின்றும வேறுபட்டது. எழுத்து முறையால், 700 ஆண்டுகட்கு முன்பும், விவிலியம் எழுதப்பெற்ற காலத்தும் ஆங்கிலம் ஒரு தன்மையாக விருந்தது' என்பதையும், போர்ச்சுகீசிய மொழி இலத்தீனின் செல்வாக்கை எதிர்த்துப் போராடியது; கலிஷியா போர்ச்சுகீசியம பிறமொழிக் கலவையால் திரிந்து தனிமொழியானது என்பதையும், தார்வே மொழி 11-ஆம் நூற்றாண்டில் உருவாகி, 1940-ஆம் ஆண்டில் வெளியான அகரமுதலியில் 25,000 சொற்களைக் கொண்டு வளர்ந்தது; ஆங்கிலம் முதலிய பிறமொழிகளினின்றே பல சொற்களைப்பெற்று இம்மொழி வளர்ந்தது என்பதையும், அரிமர்த்தன புரம் என்ற பாகன் (Pagan) என்ற இடத்தில் பர்மிய மொழி 11-ஆம் நூற்றாண்டில் எழுத்துருவம் பெற்றது; இதன் நெடுங்கணக்கு தென்னாட்டுப் பல்லவர்கால எழுத்தைச் சார்ந்தது; 13-ஆம் நூற்றாண்டுவரை பேச்சு மொழியாகவே யிருந்து பின் இலக்கிய மொழியாக அமைந்தது என்பதையும், பழஞ் சப்பான் மொழிநடையினின்று பெரிதும் மாறுபட்டுப் புது சப்பான் மொழிநடை பயில்வதையும் மொழிநூலறிவே நமக்குணர்த்துகிறது.

---

† "The earliest form of our English tongue is very different from modern English in form, pronunciation, and appearence; but still the language written in the year 700 is the same as that in which the prose of the Bible is written just as much as the tree planted a hundred years ago is the same tree to day." (S. A. Brooke.)

§ எந்த இன மன்பதையாயினும்—அதனியல்பு எதுவாயினும், அஃது எத்துணை பெரிதாயினும்—மொழி இன்றியமையாத முதன்மையிடம் பெற்றுப் பயன்படுகிறது. ஓரினமக்களை பிணித்துள்ள திண்ணிய கட்டுப்பாடு மொழியே. மன்பதையுறுப்பினரை யிணைத்திருப்பதும் மொழியே. தனி மாந்தரின் இனக்குறியும், காப்பரணுமாக அன்னார் பொதுவாழ்வில் அமைந்து திகழ்வதும் மொழியே. இனத்தின் தனித்தன்மையை உறுதிப்பாடுறுத்துவதில் மொழியைவிட ஒப்பற்ற திறனுடைய கருவி எதுவுளது? எதுவுமில்லை. மக்களின் நினைவின் அறிகுறியாகவும், அவர்தம் உடன் பிறப்புணர்வுச் சின்னமாகவும் திகழ்வது மொழியே" என மொழியலறிஞர் வெண்டிரிசு மொழிவார். ‡ அதனாற்றான் அறிஞர் ஈமன் திவேலரா நாட்டுரிமையினும் மொழியுரிமையையே தாம் நனி பெரிதும் விரும்பி ஏற்க விழைவதாக வற்புறுத்தினார்.

ஆகவே மொழிவளம் பேணுதல் ஒருநாட்டு மக்களின் முதற் கடமையாம். தமிழின் மொழியியலை ஆராய முற்பட்ட நல்லோருள் மாகறல் கார்த்திகேயர் குடுப்பிடத்தக்க முன்னோடியாவர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் இயற்றிய பேரறிஞர் கால்டுவெல் அவர்களால் பிறநாட்டறிஞர் திராவிட மொழிகளைப்பற்றியும், செந்தமிழைப்பற்றியும் ஆர்வங் கொண்டனர் மாகறல் கார்த்திகேயர் தமிழின் மொழிநூலைத் தம்காலத்திற்கேற்ற பாங்கில் பெரும்பாடு பட்டு இயற்றித் தந்தனர். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாகறல் என்ற ஊரில் தோன்றிய கார்த்திகேயர் சைதாப்பேட்டை கண்டிவெசுலேனியன் மிசன் தியலாசிகல் கல்லூரித் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் இவரின் மொழிநூல் 1913 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது. இந்நூல் பாயிரவியல், இலக்கணவியல், முதனிலையியல் என்ற மூன்று பகுதியாக அமைந்துள்ளது; 328 பக்கங்களாலியன்றது. இந்நூற்கு M. S. பூரணலிங்கனார் ஆங்கிலத்தில் அரிய முன்னுரை வழங்கியுள்ளார் [1]

---

§ If any social group, whatever its nature and however large it may be language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and is at the same time the symbol and safeguard of their common life What instrument can have greater efficacy than language in affirming the individuality of the group? It is their sign of recognition and their badge of brotherhood.

—*J. Vendryes.*

‡ If asked to choose the langnage without freedom, or the freedom without Language, I shall certainly choose the former—*திவேலரா.*

'கார்த்திகேயரின் மொழிநூல்' அத்துறையின் முதல் நூலாகும். ஆயின், மிகு வியக்கத்தக்கப் பேருழைப்பால் மலர்ந்தது. அஃது என்பதை இஞ்ஞான்று எண்ணிடினும் நமக்குத் திகைப்பையே விளைவிக்கிறது. விரிந்து பரந்த நூலறிவும், ஆழ்ந்தகன்ற நுண்ணிய ஆராய்ச்சியாற்றலும், ஒள்ளிய கற்பனைத்திரமும், அஞ்சொல் நுண்தேர்ச்சிச் செஞ்சொற் புலமையும் சான்றவர் கார்த்திகேயர் என்பதை அவர் மொழிநூலே உலகுக்குணர்த்தும். கார்த்திகேயர் அற்றை நாளே இற்றைத் தமிழர்க்கு ஓர் அரும்பெரும் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதனையுணர்ந்தால் அவ்வறிஞர் பெருந்தகையின் நோக்கமும் வாழ்வுக் கொள்கையும் தெற்றெனத் தெளிவாகும் :

கார்த்திகேயரின் வேண்டுகோள் :

"தமிழர்கள் பெரிதும் பற்று வைத்துத் தமிழ்நூலைக் கற்றல் வேண்டும். ஏனையோரும அதனை யிகழாது கற்றல் நன்றே. புகழ் நிமித்தமாகவும் பொருள் நிமித்தமாகவும் தமிழ் நூல் கற்றல் கூடாது. *பதி பசு பாச இலக்கணங்களை அறிதற்பொருட்டே கற்றல்

---

[1] அவர் முன்னுரையில் தமிழாசிரியர் பற்றியும் தமிழ்த் தொண்டாற்றுவார் பற்றியும் உள்ள சுவையான குறிப்பு:

"In these evil days for Pandits who have fallen upon evil tongues and who are branded as old-world men and walking cyclopedias devoid of historic sense and comparative knowledge, none but scholars of either extraordinary pluck and unquestioned assiduity or original force and intrinsic worth can tower above the heights of unmerited obloquy and gratuitous calumny, of narrow prejudices and supercilious contempt encircling them. Of these two classes, some are like cadgers ever bent on collecting the products of ancient literary delvers, putting them ship-shape, and selling them in the best market, while others are like badgers at all times barrowing in the musty rolls of the past, spending their midnight oil, and worrying their brains until they garner in their dark dens little corn-hoards of precious truth. These cadgers and badgers are wanted if intellectual life is to be worthily lived. The patient indefatigable labours of a Swaminatha Ayer are as necessary for the Tamil world as the tireless researches of a Karthikeya Mudaliar.

—*(M. S. Puranalingam Pillai.* (12th April 1913)

* இனைய கருத்துக்கள் இக்காலத்தவர்க்கு இசையாததாகலாம். ஆயின், கார்த்திகேயரின் கருத்து அஃது என வுணர்ந்து; தற்காலத் திற்கேலாதனதைக் கழித்துவிடுதலில் பிழையில்லை. ஒருவரின் எல்லா நோக்கங்களும் அனைத்து கருத்துக்களும், பிறர்க்கு விருப்ப

வேண்டும். தமிழ் கற்றோர், கற்கின்றோர், கற்போர் இவர்கள்பால் அன்புடையனாகுக. வறியனாயினும் தமிழ் கற்க, கற்பிக்க.

செல்வனாயினும் கற்க; கற்பிக்க. தமிழ் முன்னே நீ கற்க. பின் மகனுக்கும் கற்பிக்க அதன்பின் உரைகோளாளன் முதலோர்க்குங் கற்பிக்க. தமிழ் கற்க விரும்புவோன் பகைவனா யினும் பகை தணித்துக்கொண்டு கற்பித்தல்வேண்டும். எவ்வெவ் விடங்களில் கூடுமோ அவ்வவ் விடங்களிலெல்லாம் கற்பித்தல்வேண்டும். எவ்வளவு கூடுமோ அவ்வளவு கற்க; கற்பிக்க; கேட்க; கேட்பிக்க. ஆங்கில சங்க மொழிந்த மற்றைய சங்கங்களிலெல்லாம் தமிழே பேசுக; ஆங்கிலம் பேசற்க. இடை யிடையே ஆங்கிலங் கலந்தும் பேசற்க. ஆங்கிலப் பெரி யோர்க்கு உண்மையெடுத்தினிது கூறி நாட்டிற்கு நன்மை செய் யும்பொருட்டு ஆங்கிலங் கற்றல்வேண்டும் † புகழ் நிமித்தமாக வும், பொருள் நிமித்தமாகவும் ஆங்கிலங் கற்றல் அவ்வளவு சிறப்பாகாது. அரசனாக வரினும் அமைச்சனாக வரினும் மட பதியாக வரினும் தக்க இடங்களில் தமிழ்க் கல்லூரி நாட்டி நடாத்துக. இச்சூழ்ச்சியைச் சிறிதும் மறவற்க.

மக்களில்லையென்று கவலையின் மூழ்கிக் கண்ணீர்விடற்க. அப் பொருளை முதலாக வைத்து ஓர் தமிழ்க் கழகம நிலைநாட்டி நடாத்தி வரின் அம்மாணவரெல்லாம் நினக்கு வழி வழி நன் மக்களாவர்.”

தமிழ்ப் புலவர்க்கு இயன்றவரை பொருளுதவி செய்க: செய்யாதிருக்கற்க; கலியாண முதலியவற்றில் தமிழ்ப் புலவர்க்கு மரியாதை செய்க.

எப்பொழுதும் தமிழையே தெய்வம் போலவும், நற்றாய் போல வும் சிந்திக்க; நீ தமிழ்மயமாவை; நின் மக்களும் தமிழ்மயமாவர்; நின் குடியுந் தமிழ்மயமாகும்; உளமும் தமிழ்மயமாம்.

நின் கை தமிழ்நூல் எழுதுக, நின் வாய் தமிழையே பேசுக. நின் மனம் தமிழையே சிந்திக்க. நோய்கொண்டு மெலியனாயின். மருந்துண்டு வலியனாகித் தமிழ் கற்க.

நீர்க்குமிழிக்குப் பொற்பூண் கட்ட முயல்வது போல யாக்கைப் பயனென்றே கருதி அலையற்க

மூட்டுவதாக இருக்க இயலாதன்றோ? அவர் காலவியல்புக்கேற்பக் கூறும் எண்ணங்களை அக்காலத்தின் எதிரொலியெனக் கொண்டு புறக்கணித்துவிடலாம். நமக்கு இன்றியமையாததை ஏற்போம், பாராட்டுவோம்.

† இந்நூல் ஆங்கிலர் ஆட்சிக் காலத்தில் எழுதி வெளியிடப் பட்டதென்பதால் இவ்வாறு அவர் எழுதியுள்ளார்.

சில கணமேனும் தமிழ்நூல் கற்க. சில கணமேனும் கடவுளைப் போற்றுக. தவத்துக்கொருவர், தமிழுக்கிருவர். இச்சூழ்ச்சியைச் சிறிதும் மறவற்க.

திருமுறைக் கூடம் நாட்டித் தமிழ்நூலையும் பிறநூல்களையும் போற்றுக; மற்றைய பாஷைகளையும் (மொழிகளை) இகழற்க.

(பாயிரவியல்: பக்: 85-86)

எத்துணை தமிழ்ப்பற்றும் தமிழார்வமும் உடையவர் கார்த்திகேயர் என்பதனை இப்பகுதியைக் கற்போர் நன்குணர்வர். இவ்வார்வ எழுச்சியே தமிழாராய்ச்சி விளைவாக மொழிநூலை எழுதத் தூண்டியது.

†† இவரின் நூலின் தொடக்கமே மிக அருமையாக அமைந்துள்ளது.

"கடல்புடை சூழ்ந்த இப்பரவை யுலகின்கண்ணே யிற்றை ஞான்றுள்ள ஆராய்ச்சி பலவற்றுள்ளும் மொழியாராய்ச்சி செய்தல் தலைசிறந்த தொன்றாக நிற்றலின், பலவாண்டுகளாகத் தமிழ் முதலிய மொழியாராய்ச்சி செய்தலையே மேற்கொண்டு முயன்ற திறத்தினனே சொல்லெல்லாம் காரணச் சொல் என்பது திண்ணமாயிற்று.

ஒவ்வோர் பொருளின் தன்மையறிந்த மருத்துவன் நல்லதோர் மருந்து கூட்டுமாறு போல, ஒவ்வோர் சொல்லின் காரணமுணர்ந்த புலவன், நல்லதோர் பாநடையும் உரைநடையும் அமைத்தல் கூடுமாதலின்: அனைத்துச் சொற்களுக்குங் காரண முதலியன கூறத் துணிந்தனன்" (பாயிரவியல்: பக: 1)

முதற் பாயிரவியலில் தமிழின் தோற்றும். மொழி வழக்கின் இயல்பு, வடமொழிக்கும் முன்னே தமிழ் தோன்றிய வாய்மை நாவினியற்கையை யொட்டியே தமிழ்மொழியின் ஒலிமுறை யமைந்தமை முதலியவற்றை ஆராய்ந்துள்ளார். அவர் கருத்துகளுட் சிலவற்றை ஈண்டு உணர்த்தல் சிறப்பாம்;

1. "குறிஞ்சி முதலிய ஐவகைத் திணைக்கும் கருப்பொருள் கூறுவார்; அவ்வந் நிலத்து மொழியையுங் கூறுமையின் அக்காலத்து அவ்வைவகைத் திணைக்கும் தமிழ் பொதுப்பட்ட வழக்காக இருந்ததெனத் தெளிதல் வேண்டும." (பாயிர: பக்: 22)

---

†† கார்த்திகேயரின் கடவுள் வாழ்த்துப்பா :

"கடற்காட்சி வான்காட்சி கார்வரைசூழ் காட்சி
உடற்காட்சி யவ்வுடலொரண் சூற்—படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓரிறைவன் உண்டென்னும்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்—(கார்த்திகேயர்)